DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.19/2022**

**2025-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.01 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 01 | தொழில் | - | சுய தொழில் |
| பெயர் | - | மதனகோபால் | வட்டம் | - | பொள்ளாச்சி |
| த/பெ | - | ராதாகிருஷ்ணன் | சமயம் | - | |
| கிராமம் | - | பொள்ளாச்சி | வயது | - | 50/2025 |
| சாதி | - | | | | |

**24-09-2025**

**( 1-ம் எதிரி ஆஜர். 2 முதல் 24 எதிரிகள் ஆஜரில்லை.)**

(2 முதல் 24 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை:**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து, வால்பாறையில் KGR எஸ்டேட் நடத்தி வந்தேன். ஆஜர் 1-ம் எதிரி எனது மனைவி ஆவார். 2-ம் எதிரி எனது மகன் ஆவார். 3 முதல் 24 வரையிலான எதிரிகள் எனது எஸ்டேட்டில் பணிபுரிபவர்கள் ஆவார்கள். சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் நினைவில்லை. ஒரு நாள் காலை 08.00 மணியளவில் நான் எனது எஸ்டேட்டில் இருந்த போது, எனது மனைவி, மகன், அங்கிருந்த தொழிலாளர்கள் அனைவரும் பிரச்சனை செய்தார்கள். என் வீட்டருகே ஒரு சிறிய அறை உள்ளது. அதனை நான் பூட்டிவைத்திருந்தேன். அந்த பூட்டை உடைத்து எதிரிகள் வேறு ஒரு பூட்டை போட்டிருந்தார்கள். நான் அதனை உடைத்து வேறு ஒரு பூட்டை போட்டேன். அந்த அறையில் எந்த பொருளும் வைக்கவில்லை. எதிரிகள் அந்த அறையில் மருந்தடிக்கும் மிசின் மற்றும் மருந்துகள் அதில் வைத்திருந்ததாக கூறினார்கள். அவற்றை நான் திருடிக்கொண்டு வந்துவிட்டதாக என்னிடம் பிரச்சனை செய்தார்கள். நான் வீட்டிற்குள் சென்ற போது, எல்லோரும் வீட்டின் முன்பு வந்து நின்றார்கள். என்னை வெளியே வரவிடவில்லை. நான் 100-க்கு போன் செய்து புகார் வைத்தேன். அதன் பின்பு உதவி ஆய்வாளர், ஒரு காவலர் மற்றும் ஒரு ஓட்டுநர் அங்கு வந்தார்கள். அவர்கள் வந்தபின்பும், அவர்கள் கோரிக்கை விடுத்தும் எதிரிகள் என்னை வெளியே விடவில்லை. நான் இருந்த அறைக்கு வரும் பைப் லைனில் தண்ணீர் வரவில்லை. அதனையும் நிறுத்திவிட்டார்கள். எனக்கு உணவு கொடுப்பதற்கும், தண்ணீர் கொடுப்பதற்கும் ஆள் இல்லை. அதிகாலை 02.00 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளர், தாசில்தார் மற்றும் வால்பாறை போலீசார், வாட்டர் பால்ஸ் போலீசார், முடீஸ் போலீசார், வனத்துறை அலுவலகத்திலிருந்து Gaurd சம்பவயிடத்திற்கு வந்தார்கள். காவல் துணை கண்காணிப்பாளர் சமரசம் பேசி என்னை அதிகாலை 03.00 மணிக்கு என்னை வெளியே

விட்டார்கள். நான் பொள்ளாச்சிக்கு சென்றுவிட்டேன். மறுநாள் மீண்டும் வால்பாறை காவல் நிலையம் வந்து புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது. **(அந்த புகார் மனு அ.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** எதிரிகள் கையில் கட்டைகள் வைத்திருந்தார்கள். யாரும் என்னை தாக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. அ.சா.ஆ.1 புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் ஆமாம். புகாரை நான் என் கைப்பட எழுதினேனா அல்லது வேறு யாரும் எழுதிக்கொடுத்தார்களா என்றால் நான் எழுதவில்லை. நான் சொல்ல சொல்ல வேறு ஒரு நபர் எழுதிக்கொடுத்தார். புகாரை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். நான் தொழிலாளர்களுக்கு Show cause நோட்டீஸ் என்ன சொல்லி அனுப்பியிருந்தேன் என்றால் எனது எஸ்டேட்டில் வேலை செய்யும் நிரந்தர தொழிலாளர்கள் அனைவரும் வேலைக்கு வர வேண்டும் என்று அனுப்பியிருந்தேன். Show cause நோட்டீஸ் யார் யாருக்கு அனுப்பினேன் என்றால் பொதுவாக நோட்டீஸ் ஒட்டினேன். தொழிலாளர் அலுவலருக்கு ஒரு நோட்டீஸ் அனுப்பினேன். எஸ்டேட்டில் என்ன பயிர் செய்யப்பட்டுள்ளது என்றால் டீ, காபி, மிளகு வைக்கப்பட்டுள்ளது. நான் தேயிலை யாருக்கு அனுப்பி வைத்தேன் என்றால் பாரி ஆக்ரோவிற்கு அனுப்பி வைத்தேன். கட்டையுடன் யார் யார் நின்றிருந்தார்கள் என்ற விவரத்தை நான் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மொத்தமாக சொன்னேன். காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு போலீசார் வந்தார்கள் என்றால் காலை 08.00 மணிக்கு வந்தார்கள். போலீசார் என்னை அழைத்து சென்று புகார் கொடுக்க வைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் தான் கொடுத்தேன். எங்களுக்குள் சொத்து தகராறு உள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற விசாரணையில் சொல்லியுள்ளவாறு தான் போலீசார் விசாரணையிலும், புகாரிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் இவ்வழக்கின் எதிரிகளான தொழிலாளர்கள் வேலைக்கு வரவில்லை என்று தான் Show cause நோட்டீஸ் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் சொல்லியவாறு எதிரிகள் யாரும் வேலைக்கு வரவில்லை என்றாலும், நான் சொன்னது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எனக்கும், எனது மனைவி, மகனுக்கும் உள்ள சொத்து பிரச்சனைக்காக அவர்களுக்கு எதிராக நான் தவறாக புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தமல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.